1981 பிப்ரவரி 28]

திரு. எல். இளையபெருமாள்: நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது ஒரு குறுகிய கால வினா கேட்டு இருந்தேன். அது இதுவரையில் எடுத்துக்கொள்ளப்பெற வில்லை. அந்தக் கேள்விக்கு முக்கியத்துவம் அளிக்காமல் விடப்பட்டு இருக்கிறது. 'ஷார்ட் நோட்டீஸ்' என்று கொடுத் தது, இப்போது 'லாங் நோட்டீஸ்' என்ற வகையில் மாறியும் வரவில்லையே, ஏன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மாதிரி கேள்விகள் இப்போது கேட்கக் கூடாது. கேள்வி நேரம் முடிந்தபின் கேட்கலாம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காலை 9 மணிக்கு அவை ஆரம்பிக்கின்றபோது, முதன்முதலாகத் தலைவர் அவர்களால் கூறப்படுகிற நல்ல குறள்கள் அவைக் குறிப்பில் இடம் பெறுகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பேசுகிற அல்லது சொல்லப்படுகிற அத்தனையும் அவைக்குறிப்பில் இடம் பெறும். இப்போது தாங்கள் கேட்பது உட்பட அவைக்குறிப்பில் இடம் பெறும்.

2. வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நம்புதாளையில் இரால் வளர்ப்புப் பண்ணை.

வினா எண். 301—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

'திருவாடனைத் தொகுதியில் உள்ள நம்புதாளையில் இரால் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் தற்போது எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 'திருவாடனைத் தொகுதியில் உள்ள நம்புதாளையில் இரால் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை'.

[1981 பிப்ரவரி 28

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்புதாளைக்கு அருகே காரங்காடு என்ற ஊரில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு ஒப்புதல் அளித்து, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, 2—3 ஆண்டுகள் ஆகியும், இன்னும் துவக்கப்படாமல் இருக்கிறது. அதைத் துவக்க அரசு உடனே முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காரங்காடு என்னுமிடத்தில் சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ. 3·65 இலட்சம் செலவில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை அமைக்க 1979-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து வரப்பெற்று, தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களுக்கான உதவித் தொகையை வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டது மறுக்கப்பட்டு விட்டது. இருப்பினும், மீண்டும் அதற்கான அவசியத்தை வலியுறுத்தியதன் பேரில் மத்திய அரசு நிதி உதவி அளிக்க கொள்கை அளவில் இசைந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி வந்ததும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காரங்காட்டில் மட்டுமல்ல, அதற்குப் பக்கத்தில் உள்ள இடங்களிலும் மீன் வளர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் உண்டாக்கக்கூடிய வகையில் நிலங்கள் இருக்கின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டபோது சொன்னார்கள். இந்த நிலங்களெல்லாம் அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படும், அதில் அவர்கள் மீன் வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அந்த இடங்கள் மீனவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப் பெறாமல் இன்னும் இருப்பதால், மீன் வளர்ப்புப் பணி அங்கே தடைபடுகிறது. ஆகவே, அங்கேயுள்ள மீனவர்களுக்கு அந்த நிலத்தை மீன் வளர்ப்பதற்காகக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இறால் வளர்ப்புப் பணிகள் ஆங்காங்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற தன்மையின் அடிப்படையில் அதற்கான முயற்சிகளிலே இந்த அரசு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. நான் முதலிலே கூறியபடி, காரங்காடு என்ற இடத்தில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்க இருப்பதோடு மட்டுமல்லாமல், இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்ணாமுனை என்ற இடத்தில் ரூ. 33,500 செலவில், இறால் வளர்ப்புப் மாதிரிப்பண்ணை நிறுவ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணை நிறுவதற்கான

1981 பிப்ரவரி 28]

மதிப்பீடுகளையும், வரைபடங்களையும் அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர் கேட்கப்பட்டுள்ளார். அவை கிடைக்கப்பெற்றவுடன் இம்மாதிரிப்பண்ணைத் திட்டம் நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்லாமல், வேறு எங்கெங்கே இந்த மாதிரிப் பண்ணைகளை நிறுவலாம் என்பது குறித்தும் துறை ஆராய்ந்து வருகிறது. அந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிற இடங்களில் அந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, மீன் வளர்ப்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்துகளிலும் பெரிய பெரிய தொட்டிகள் கட்டிவைத்தார்கள். அதில் இப்போது ஏதாவது மீன்கள் வளர்க்க வழி வகை செய்யப்பட்டுள்ளதா?

[முற்பகல் 9–10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூலக் கேள்வி நம்புதாளை பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் கேட்டிருக்கிறார்கள். மீன் வளர்ப்புத் திட்டத்தை எந்தெந்த வகையிலே செயல்படுத்த முடியுமோ அந்தந்த வகையிலே செயல்படுத்த விரிவான திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்க முடியும்.

பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து பள்ளிக் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு.

*வினா எண். 302—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசுச் சீட்டு வருமானத்தில் பள்ளி கட்டிடம் கட்ட நிதி தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இதுவரை பள்ளி கட்டிடம் கட்ட தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசுச்சீட்டு வருமானத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS